(4)

202

சுருக்கம்

அறிவிப்புகள் – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படும் சத்துணவு மையங்களின் பயனாளிகளுக்கு 2007–2008–ஆம் ஆண்டின் பகுதி-II திட்டத்தின்கீழ் எவர்சில்வர் தட்டுகள் மற்றும் டம்ளர்கள் வாங்கி வழங்குவதற்கு ரூபாய் 85 இலட்சம் செலவினத்திற்கு ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது.

---

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி–1) துறை

அரசாணை நிலை எண்.82 நாள் 31-05-2007

படிக்கப்பட்டது:

1) அரசு ஆணை (நிலை) எண் 143 சமூகநலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை நாள் 27–9–2006

2) சமூகநல இயக்குநரின் நக.எண்.18268/சஉதி/2007 நாள் 17.4.2007

:-:

ஆணை :

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 10–4–2007ஆம் நாள் நடைபெற்ற இத்துறையின் மானிய கோரிக்கையின்போது மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் பள்ளி சத்துணவு மையங்கள் மற்றும் குழந்தைகள் மையங்களுக்கு பாத்திரங்கள் வாங்கவும் சமையலறைகளை நவீனப்படுத்தவும் இந்த ஆண்டு ரூபாய் 4 கோடியே 51 இலட்சம் செலவிடப்படும் என்று அறிவித்துள்ளார்கள். சத்துணவு உட்கொள்ளும் 2 இலட்சத்து 58 ஆயிரம் குழந்தைகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்கள் வாங்க 85 இலட்சம் ரூபாய் செலவில் இத்திட்டத்தினை 2007-08ம் ஆண்டிற்கான பகுதி-II திட்டமாக செயல்படுத்த நிதி நிலைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. அதனடிப்படையில் சத்துணவுத் திட்ட பயனாளிகளுக்கு ஒரு எவர்சில்வர் தட்டு மற்றும் ஒரு எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்க நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு சமூகநல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டார்.

2) மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படியும் பகுதி-II திட்டத்தின்படியும் சமூகநல இயக்குநரின் கருத்துருவை ஏற்றுக் கொண்டு பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 2,57,575 மாணவ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டுக்கள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்குவதற்கு சமூகநல இயக்குநருக்கு ரூ.85.00 இலட்சத்தினை (ரூபாய் எண்பத்தி ஐந்து லட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

3) மேலே பத்தி 2–ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்

" 2236–சத்துணவு. 02–சத்துணவு மற்றும் பானங்கள் வழங்கல். 102–மதிய உணவு I திட்டத்தில் சேராதது AX –புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்தின்கீழ் சமையல் பாத்திரங்கள் மாற்றுதல் – 24 பொருள்களும் வழங்கலும் (த.தொ.கு. 2236–02–102–AX–2408).



212

4. ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையினை பயன்படுத்தி ஊரக மற்றும் நகர்ப்புற பள்ளி சத்துணவு மையங்களில் பயன்பெறும் 2,57,575 மாணவ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்க தேவைப்படும் நிதியை தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு பிரித்து அளிக்க சமூகநல இயக்குநருக்கு அனுமதியளிக்கப்படுகிறது. மேலும் 2007–08ஆம் ஆண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களை தேர்வு செய்யவும், ஒப்பளிக்கபட்ட தொகையை மாவட்டங்களுக்கு பங்கீடு செய்யவும், 2,57,575 மாணவ மாணவிகளுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் எவர்சில்வர் டம்ளர் வாங்கி வழங்கப்படுவதை கண்காணிக்கவும் சமூகநல இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

5) ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகைக்குள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விதிகள் 2000–ன்படி, 2007–2008ஆம் ஆண்டிற்கு ஒப்பந்தப்புள்ளி கோரவும், எவர்சில்வர் தட்டுகள் மற்றும் எவர்சில்வர் டம்ளர்கள் வாங்கி வழங்கவும் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது .

6) அனுமதிக்கப்பட்ட, நிதி ஒதுக்கீட்டினை பயன்படுத்தியது குறித்து பயனீட்டுச் சான்றினை அரசுக்கு உடனடியாக அனுப்பிவைக்கும்படி சமூகநல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7) இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் அதன் அ.சா.கு.எண்.33617/சந/07 நாள் 29-05-2007ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்,
அரசு செயலாளர்

பெறுநர்
சமூகநல இயக்குநர், சென்னை–5
நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5
திட்ட ஒருங்கிணைப்பாளர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்,
சென்னை–113
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர் (கிழக்கு, தெற்கு மற்றும் வடக்கு),
சம்பளம் மற்றும் கருவூலக் கணக்கு அலுவலர், மதுரை/ கோவை
உதவி சம்பள மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–3
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை–6/9/18/35
நகல்
நிதி (சந)த் துறை, சென்னை–600 009( 2 நகல்கள்)
சமூக நல அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட(சந–7 மற்றும் சந2)த் துறை, சென்னை–9
நிதி(வரவு–செலவு பொ–1)த் துறை, சென்னை–9
அரசு புள்ளி விவர வகைப்பாட்டு மையம், சென்னை–25.
இ.கோ / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்

H:\aug8\swnmp\plattumblegomsno[1][1].8dt.31-05-2007.doc

213